


மாமல்லபுரத்தில் 3.8.2025 முதல் 12.8.2025 வரை 4–ஆவது ஆசிய சர்ஃபிங் சாம்பியன்ஷிப் தமிழ்நாடு –2025 போட்டி நடைபெறவுள்ளதையொட்டி, நேற்று முன்தினம் (15.7.2025) சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய அலைச்சறுக்கு அணி வீரர், வீராங்கனைகள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்திகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய அலைச்சறுக்கு கூட்டமைப்பின் தலைவர் அருண் வாக, இந்திய அலைசறுக்கு கூட்டமைப்பின் கவுன்சில் மெம்பர் சோம்தேவ் தேவ்வர்மன் மற்றும் தமிழ்நாடு அலைச்சறுக்கு சங்க துணைத்தலைவர் வீரபாகு ஆகியோர் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2025) சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சர்ஃபிங் விளையாட்டு குறித்த ”TRACKS INDIA என்ற இதழை வெளியிட, இந்திய அலைச்சறுக்கு கூட்டமைப்பின் தலைவர் அருண் வாசு அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய அலைசறுக்கு கூட்டமைப்பின் கவுன்சில் மெம்பர் சோம்தேவ் தேவ்வர்மன் மற்றும் தமிழ்நாடு அலைச்சறுக்கு சங்க துணைத்தலைவர் வீரபாகு ஆகியோர் உடனிருந்தனர்.

## இந்தியாவுக்காக பங்கேற்கும் 12 விளையாட்டு வீரர்களில் 10 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்!

# சென்னையில் ‘ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் -2025’ போட்டிகள் வருகிற ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி தொடங்கி 12 வரை நடைபெறும்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை,ஜூலை 17-**

**சென்னையில், ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் -2025 போட்டிகள் வருகிற ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி தொடங்கி 12 வரை நடைபெறும் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் அறிவித்தார்.**

**துணை முதலமைச்சர் - உதயநிதி ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பின் விவரம் வருமாறு:**

அனைவருக்கும் என் இனிய மாலை வணக்கம். மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எஸ்.டி.ஏ.டி (SDAT) சார்பாக, ஊடக நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். 2025-ஆம் ஆண்டுக்கான `ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் போட்டி’யை வருகிற ஆகஸ்ட் 3-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை சென்னை, மாமல்லபுரத்தில் தமிழ்நாடு நடத்தும் என்பதை அறிவிப்பதில் நான் மிகவும் பெருமைகொள்கிறேன்.

### துடிப்பான மாநிலம்

இந்த மதிப்புமிக்க போட்டி முதன்முறையாக இந்தியாவில் நடக்கவிருக்கிறது. அதனை தமிழ்நாடு அரசு அதாவது நம் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று நடத்துவது, நமக்கெல்லாம் பெருமை. விளையாட்டுத் துறையில், தமிழ்நாடு இந்திய அளவில் ஒரு துடிப்பான மாநிலமாக மாறியுள்ளதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

கடந்த சில ஆண்டுகளில், நமது மாநிலம் ஃபிடே (FIDE) செஸ் ஒலிம்பியாட், ஸ்குவாஷ் உலகக் கோப்பை, உலக அலைச்சறுக்கு லீக் தேர்வுத் தொடர்-3000, ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி, தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப், சைக்கிளோத்தான், தெற்கு ஆசியாவின் முதல் ஃபார்முலா-4-இரவுநேரப் பந்தயம், 2023-கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.




### 3 கோடியே 30 லட்சம் ரூபாய்

இந்தப் போட்டிகள் தமிழ்நாட்டை இந்தியத் துணைக் கண்டத்தில் விளையாட்டுத் துறையின் ஆற்றல் மையமாக நிலைநிறுத்தியுள்ளன. இந்த மணிமகுடத்தில் மற்றொரு மாணிக்கமாக, நாம் நடத்தவிருக்கும் ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் அமையும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போட்டியை வெற்றிகரமாக நடத்துவதற்காக 3 கோடியே 30 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளார். 2026-இல் ஜப்பானில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான இறுதி தகுதிச் சுற்றாக அமைவதால், இப்போட்டி மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

### சிறப்பு அம்சங்கள்

இப்போட்டி குறித்த முக்கிய அம்சங்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்:

- **அலைச்சறுக்கு விளையாட்டில் இந்திய அளவில், தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது.**
- **20 நாடுகளைச் சேர்ந்த, ஏறக்குறைய 150 விளையாட்டு வீரர்கள் இந்த சர்வதேசப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.**
- **இந்த நிகழ்வு தமிழ்நாட்டில், அலைச்சறுக்குச் சுற்றுலாவை மேம்படுத்தும்.**
- **2023-உலக அலைச்சறுக்குப் போட்டியில் பங்கேற்ற 4 இந்திய வீரர்களில் 3 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.**
- **முந்தைய ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப்பில் பங்கேற்ற 8 இந்திய வீரர்களில் 7 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்களது திறமையான செயல்பாடு இந்தியாவுக்கு வெள்ளிப் பதக்கத்துடன், ஆசிய விளையாட்டுப் போட்டியில் கூடுதலாக இரண்டு இடங்களைப் பெறவும் உதவியது.**
- **எதிர்வரும் 2026 ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப்பில், இந்தியாவுக்காக பங்கேற்கும் 12 விளையாட்டு வீரர்களில் 10 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.**
- **குறிப்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த திறமையான இளம் அலைச்சறுக்கு வீரர் கிஷோர்குமார் அவர்களைக் குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு சர்வதேசப் போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள அவரது வெற்றி, நமது கடலோர மற்றும் மீனவ சமூகங்களைச் சேர்ந்த இளம் அலைச்சறுக்கு வீரர்களுக்கு உத்வேகமளிக்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறது.**
- **இத்தகைய வளர்ச்சியை ஆதரிக்க, மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழ்நாடு கடற்கரை நெடுகிலும் அலைச்சறுக்குப் பள்ளிகள் மற்றும் பயிற்சி மையங்களை நிறுவ உதவியுள்ளது.**

### நீர் விளையாட்டுத் திறன்

- **தமிழ்நாட்டின் நீர் விளையாட்டுத் திறனை மேம்படுத்த, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பிரப்பன்வலசை கிராமத்தில் 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமியை நிறுவ ஆணையிட்டுள்ளார். நமது அடித்தளத் திட்டங்கள், உள்ளூர் திறமைகளை சர்வதேச தளங்களுக்கு எடுத்துச்செல்ல உதவியுள்ளன.**
- **இன்று, தமிழ்நாடு அலைச்சறுக்கு விளையாட்டு மேம்பாட்டிற்கு முன்மாதிரி மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நமது முன்னெடுப்புகள் கடலோர சுற்றுலாவை வலுப்படுத்தி, வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதுடன், பாரம்பரிய மீனவ சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களின் வாழ்வை மேம்படுத்தியுள்ளன.**
- **நமது முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டங்களின் வாயிலாக, அலைச்சறுக்கு மற்றுமொரு வழக்கமான விளையாட்டு எனும் அந்தஸ்தில் இருந்து, மாநிலத்தின் முக்கிய விளையாட்டாக உயர்ந்துள்ளது.**
- **தமிழ்நாடு தற்போது இந்தியாவின் அலைச்சறுக்கு விளையாட்டுத் தலைநகராக அறியப்படுகிறது. சர்வதேச மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் எதிர்கால சாம்பியன்களுக்கு உற்றத் துணையாக இருப்பதில், நாங்கள் பெருமை கொள்கிறோம்.**
- **இந்த மதிப்புமிக்கப் போட்டி குறித்து, பரவலான கவனத்தை ஈர்க்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஊடக நண்பர்களாகிய உங்களது ஆதரவை நாங்கள் கோருகிறோம். இப்போட்டி வெற்றிகரமாக நடந்தேற உங்கள் ஆதரவு மிகவும் அவசியம்.**

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர்-செயலர் ஜே.மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ்., இந்திய அலைச்சறுக்குக் கூட்டமைப்பின் தலைவர் அருண் வாசு, முன்னாள் டென்னிஸ் சாம்பியன் சோமதேவ் தேவ் வர்மன், தமிழ்நாடு அலைச்சறுக்கு சங்கத்தின் துணைத்தலைவர் வீரா உள்பட அதிகாரிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (16.07.2025)திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை பயணிகள் பயன்படுத்தும் வகையில் அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்து பேருந்து முனையத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகர காவல் ஆணையர் திருமதி.காமினி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன்,உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.தீபிசானு,துறையூர் சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்டத்தின் நிர்வாக இயக்குநர் க.தசரதன், மண்டல பொதுமேலாளர்கள் சிங்காரவேலன், சதீஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், போக்குவரத்துத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, எஸ்.வி.எஸ். சீதையம்மாள் திருமண மஹாலில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் கலந்துகொண்டு, மக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு, விவரங்களை கேட்டறிந்தார். உடன், மேயர் திருமதி.திலகவதி செந்தில், மரு.வை.முத்துராஜா எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், துணை மேயர் எம்.லியாகத் அலி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (காவிரி வைகைகுண்டாறு) திருமதி.ஆர்.ரம்யாதேவி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.அ.ஷோபா, வருவாய் கோட்டாட்சியர்கள் செல்வி.பா.ஐஸ்வர்யா (புதுக்கோட்டை), ச.சிவக்குமார் (அறந்தாங்கி), புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.